## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 132/2014 | Date :01.09.2022. | DW1 |
|---|---|---|
| Name: கோசலை | W/o. மாரியப்பன் | |
| Evidence Recorded Time: 03.05 P.M. to 03.16 P.M | | |

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

என் அப்பா பெயர் தாண்டவன், அம்மா பெயர் அமராவதி ஆகும். தாவா சொத்து என் அம்மா அமராவதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து என் அம்மாவின் தனிப்பட்ட உரிமையிலும், அனுபவத்திலும்தான் இருந்து வந்தது என்றால் சரிதான். என் அம்மாவை பாதுகாத்து பராமரித்தது நான்தான். என் அம்மாவை பாதுகாத்து பராமரித்ததன் அடிப்படையிலும் அவர் என் மீது கொண்ட அன்பின் காரணமாகவும் என் அம்மா தாவா சொத்தை எனக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். என் அம்மா 01.09.2002-ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அம்மா இறந்தவுடன் அவர் எழுதிவைத்த உயில் அமலுக்கு வந்துவிட்டது. உயிலின் அடிப்படையில் எனக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்றாலும் அந்த பட்டா எண்.911 என்றாலும் சரிதான். என் அம்மா இறந்து ஒரு வருடத்திற்குள் எனக்கு தனிப்பட்டா கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். என் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்ட விவரங்கள் அனைத்தும் என் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கும் தெரியும். என்னுடைய சுவாதீனம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில்தான் 8 முதல் 10 பிரதிவாதிகள் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். 8 முதல் 10 பிரதிவாதிகள் கிரையம் பெற்றது முதல் அவர்கள்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் நிலத்தை விற்பனை செய்தவுடன் என் உடன் பிறந்த சகோதரர்கள் தலா ஆளுக்கு ஒரு லட்சம் என்னிடம் பணமும் பெற்றுக்கொண்டார்கள். என் அம்மா எழுதிவைத்த உயிலில் உள்ள சக்குபந்தியும், நான் கிரையம் செய்து கொடுத்த நிலத்தின் சக்குபந்தியும் ஒரே சக்குபந்திதான். என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட பூர்வீக நிலங்கள் இன்றும் இருக்கிறது, அவற்றை எனது சகோதரர்கள் பாகம் பிரித்து பட்டாவும் எனக்கு தெரியாமல் பெற்றுக்கொண்டுவிட்டார்கள். மேற்படி சங்கதிகளை மறைக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் தவறான சங்கதிகளை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 8 முதல் 10 பிரதிவாதிகளை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.